මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ ලේකම් කාර්යාලය, අංක 02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: PRE/2024/78** **2024.09.13**

## சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21

## சனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக பரப்பப்பட்டுவரும் பொறுப்பற்ற செய்திகள் குறித்த விளக்கமளிப்பு

சனாதிபதித் தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் நம்பகத்தன்மையுடனும் நடாத்துவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணைக்குழு ஏலவே செய்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழு இவ்விடயத்தில் நியதிச்சட்ட ரீதியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த சுற்றறிக்கைகளையும் அறிவுறுத்தல்களையும் பணிப்புகளையும் வெளியிட்டுள்ளதோடு அது சம்பந்தமாக பொதுமக்களையும் வெகுசன ஊடகங்கள் வாயிலாக அறிவுறுத்தியுள்ளது.

இருப்பினும், இன்றைய தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்குப் புறம்பாக பல்வேறு நபர்களும் அமைப்புகளும் தேர்தல் செயன்முறை சம்பந்தமாக அதாவது வாக்கு அடையாளமிடும் விதம், வாக்குகளையும் விருப்புகளையும் எண்ணும் விதம், தேர்தல் சட்டங்களை வலுவாக்கம் செய்தல் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளும் வேறு நிர்வாகம் சார்ந்த பணிகளும் குறித்து அடிக்கடி தெரிவித்துவரும் கூற்றுக்களும் அபிப்பிராயங்களும் ஊடகங்கள் வாயிலாக பிரச்சாரம் செய்யப்படுவதை அவதானிக்க முடிகிறது. அவை தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் அல்ல என்பதும், அவ்வாறான கூற்றுக்கள் எவையும் உத்தியோகபூர்வ செல்லுபடித்தன்மை அற்றவை என்பதும், அவை சம்பந்தமான பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு இல்லை என்பதும் இத்தால் அறிவிக்கப்படுகிறது. தேர்தல் செயன்முறைக்குரிய எந்தவொரு விடயமும் சம்பந்தமாக பிரசை எவருக்கும் தேர்தல் ஆணைக்குழுவை வினவி தெளிவுபெறுவதற்கு வாய்ப்புண்டு.

தேர்தல் ஆணைக்குழு இத்தேர்தலின் போது பொதுமக்கள் அறிவுறுத்தப்பட வேண்டிய அனைத்து விடயங்களும் பணிகளும் தொடர்பாக உத்தியோகபூர்வ அறிவிப்புகளைச் செய்வதன் காரணமாக வேறு நபர்களும் அமைப்புகளும் வெளியிடும் கூற்றுக்களையும் அபிப்பிராயங்களையும் அறிவுறுத்தல்களையும் பொருட்படுத்த வேண்டாமென்று மேலும் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)